ஓ

சிவமயம்

இஷ்டலிங்கப் பதிகம்.



பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களது

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

தாதுபுஷ்டி லேகியம்.

இந்த லேகியத்தை பிரதிதினம் மாலை 6-மணிக்கு இலந் தங்காயளவு அல்லது கெச்சக்காயளவு சாப்பிடவேண்டியது. இ ப்படி எத்தனைநாள் சாப்பிட்டாலும் சாப்பிடலாம். கைகாலச நி இடுப்பசதி இவைகள் நிவர்த்தியாகும். நீத்திருக்கும் இந்தி சியத்தைக் கெட்டிப்படுத்துவதுடன் உடம்புக்கு நல்லபலத்தை யும் இரத்தவிர்த்தியையும் உண்டாக்கும். பெண்களுடன் படுக் க னைக்குந்தினத்தில் மாத்திரம் மாலை 7-மணிக்கு லேகியம் தின்றுவிட்டு உடனே கால்படி பசும்பால் சாப்பிடவேண்டியது அன்றிரவு புளிப்புசேர்க்காமல் பால்சாதம், கூட்டமுது, பொரி யல் வால், கீரைதினுசு இவ்வித பதார்த்தங்களாகப் புசித்து போகிக்கலாம். திந்திப்பு மிட்டாய்தினுசுகள் பழதினுசுகள் சா ப்பிடலாம்.

ஒருசேர் விலை ரூபா—2.

எனது பெரியகேட்லாக் வேண்டுமானால் அறையணா ஸ் டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'நாராயணவிலாஸ்'

பிரம்பூர் பாரெக்ஸ்போஸ்டு, மதராஸ்.

சடவுள் துணை.

திருவண்ணமலை

இஷ்டலிங்கப் பதிகம்.

மூவர்சீர்முதலே மூலமாகியதோர் மூர்த்தியே முக்கணனவனே, மூதுமறைப்பொருளே பரமரகசியனே முயல் மெரித்தசிவனே, தேவருமயன்மால் தேடியுங் காணுச் சிவசிவ தேவனுய்நின்று, திருச்சடைமீதில் கங்கையைத்தரித்து திரிபிறைதன்னையே முடித்து, இஞ்சலென்றடியார்க் கன்புடன் காட்சி அளித்திடும் ஆனந்தபரனே, அரகரசிவனே ஆனந்தக்கடலே ஆடும்பாதமே யருள்வாய், இன்சொலாகியதோர் இசைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய், வருவாய், இஷ்டலிங்கேசா என்கருத்தினி லிருக்கும் ஈசனே மாசிலாமணியே. 1

ஆலகாலம்போல்சீறி வருகிற விஷத்தை அள்ளிப்பவுண்டிடும்பரனே, ஐயனே கண்டங்கறுப்ப தான

வனே அம்பலத்தாடிய சிவனே காலகாலனையும் காய்ந்
தனைத் தருளிகடுந்தழல் மேனியானவனே கச்சிமா
ன்கரணவடிவுகொண் டெழுந்தள்ளலே அருணைமா
நகரில், மலையதாயோங்கி வல்வினைதீர்த்து மானிடகா
ட்சியே கொடுப்பாய், வஞ்சனைபில்லி சூனியமுதலும்
மாய்த்திடும் மூலநாயகனே, ஏலவார்க்குழலிலிசைந்த
பார்வதியும் ரிஷபவாகனனுமாய் வருவாய், இஷ்ட
லிங்கேசா யென்கருத்தினி லிருக்கும் ஈசனே மாசிலா
மணியே. 2

அஞ்செழுத்ததனி லமர்ந்திடும்பரனே ஐயனே கட
வுளாகியதோர் அப்பனே புலியூரமர்ந்த நாயகனே
ஆதியேசோதி மாமணியே, மஞ்சனீராடி கரியுரித்தா
டை வகையுடனணிந்து மேலிடத்து, மாதுபார்வதி
யை சேரவேபாகம் வைத்திடும்வள்ளல் நாயகனே,
கொஞ்சியசபையில் நடனமேபுரியுங் கோமளக்குஞ்சி
செஞ்சடையும் கொன்றைமாமலரும் கொன்றையுந்
தும்பை கொழுந்திடுவில்வமே யணிந்து, இன்சொ
லாகியதோர் யிசைந்தபார்வதியும் ரிஷபவாகனனு
மாய் வருவாய், இஷ்டலிங்கேசா யென் கருத்தினி
லிருக்கும் ஈசனே மாசிலாமணியே. 3

மூப்புராதிகளை பரப்பமாய்ங்கைத்த மூர்த்தியே முக்கணனவனே, முன்கையில்சூலமான் மழுதரித்து முடியில் வெள்ளருகுமேயணிந்து, அப்பர் சுந்தரர்க் காகியேயிசைய ஐபனேவாதவூரானே, அப்பர்மாணிக் கர்க்காகியே ரியை அரும்பரியாக்கியசிவனே, செப்ப மாய்வேட னெச்சிலுண்டவனே தென்கயிலை வாழ்கி ன்றஈசா, சேடனுபரணமணிந்த நற்பரனே சிலைநுதல் மான்மழுதரித்து, இப்பொழுதுமையாள் ஈஸ்வரியுட னே ரிஷபவாகனனுமாய் வருவாய், இஷ்டலிங்கேசா யென்கருத்தினிலிருக்கும் ஈசனேமாசிலாமணியே. 4

தக்கன்யாகத்தை யழித்திடும்வீரன் தன்னையும் வேள்வையாலளித்த, தக்கன்மாமதனே விழியினுலெரி த்தசம்புவேசதாசிவப்பொருளே, அக்கணத் தயன்மா லடிபணிந்துனது அம்பிகையாளினுஞ்சேர அகன்றி டும்மலையரைவன் மகளைநீர் புனைந்து அறுமுகன்றன் னையேயளித்த, சொக்கநாயகனே மதுரைமாங்கிரியி ற்சோதியா மாதியாம்பரனே, சொர்ணமாம் சுரூபவ ண்ணனே கண்ணுய்செம்புகா அம்புலிதரித்து, இக்க ணத்துமையாள், ஈஸ்வரியுடனே ரிஷபவாகனனுமா ய்வருவாய், இஷ்டலிங்கேசா யென்கருத்தினிலிருக்கு ம் ஈசனே மாசிலாமணியே. 5

கஞ்சுளிதரித்து காவியுமணிந்து கையினிற் கபா
லமுமேந்தி, கரியுரித்தாடை வேங்கையாசன மூக்கழு
த்தினி லுத்திராக்ஷமுமணிந்து, செஞ்சடைமீதில்கங்
கையைத்தரித்து திங்களைதன்னையேமுடித்து, சிவந்த
னல்முகத்தில் விபூதியுமணிந்து சேடனுபரணமே பூ
ண்டு, அஞ்சலென்றடியார்க் கன்புடன் காஞ்சியளித்
திடும்பாதபங்கயனே, அரகரசிவனே ஆனந்தக்கடலே
ஆடும்பாதமே யருள்வாய், இன்சொலாகியதேர் பி
சைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய் வருவாய், இ
ஷ்டலிங்கேசாயென் கருத்தினிலிருக்கும் ஈசனேமா சி
லாமணியே. 6

அத்தனே அரனே ஆலங்காட்டானே அண்ணலே
காளியோடாடும், அருமறைப்பொருளே ஆனந்த அர
னேஜபமேகடுந்தமி ழொளியேசித்தனே சிவனேசிவ
குலக் கொழுந்தே சிறுபுலித்தோலுடை யுடுத்திசிறு
பிள்ளைகரியும் தலையறிந்துண்டு சிறுவனுக்காட்சியே
கொடுத்து, முத்தனேமுதல்வா முக்கண் முனியேமூ
ஷிகன்தன்னையேயளித்த, மூர்த்தியேயென துபாவமே
யகற்றிமுன்வந்து என்னைபாண்டருளவாய் எத்தனே
தேவர்சூழவேயிடத்தில் ஈஸ்பரியாளுடன் வருவாய்,
இஷ்டலிங்கேசா யென்கருத்தினிலிருக்கும்ஈசனேமா
சிலாமணியே. 7

கயிலையங்கிரியில் கொடிமுடிபதினுயிரம் படைத் தகண்ணனே கடவுளேயெவருங், காணுணுடிவேக னகமாங்கினியிலமர்ந்த, நயனமுன்னடி யார்நற்பதப் பொருளேநான்முகன்சென்னியே கிளந்து ; கையினி ற்கபாலங் கொண்டிரந் துண்டகண்ணனே கடுந்தழ லொளியே, கயவர்தளிருளே கட்டருத் தாண்டகச்சி வாழேகம்பநாதா, கம்பையாற்றறுகி லின்பமாயிங்கு யிசைந்தபார்வதியும் ரிஷபவாகனனுமாய் வருவாய் இஷ்டலிங்கேசா யென்கருத்தினிலிருக்கும் ஈசனே மாசிலாமணியே. 8

மாதுபங்காளா மாலயன்சூழ வந்தெனக்காட்சியே கொடுப்பாய், மண்டலத்துனதுபாதமே யல்லாமற்றெ னக்காதரவறியேன், தாநுலாதுனது யூகபூடணனே தண்மையாய் மாகவுமறியேன், உகந்துடன் பஞ்சாட் சரத்தை நெஞ்சினிலுறுதியாம் துதிக்கவுமறியேன் தீ துசெய்தடியேன் திலங்கவே தனையில்சிக்கியே மனந் தளர்ந்துழன்றேன், தீவினையகற்றியுன் திருவடிதன் னில் சேர்க்குநாளெந்த நாளுளதோ, ஏதேனுமறியா ரடியன் மூன்னிங்குரிஷபவாகனனுமாய்வருவாய், இ ஷ்டலிங்கேசா யென்கருத்தினி லிருக்குமீசனே மா சிலாமணியே. 9

செய்வ தங்குலமே செப்புவதும்பொய்யேசெகத் தினில் நடப்பதும்சத்தை, ஜெகத்து மானிடர்கள்க ள்ளனென்றிடவே ஜெனனமேயிவ்வுலகெடுத்துன் அ ய்வதாகியதன் அறிவுவந்ததிலைவதியே அனுபவித்த லந்தேன், அமையுமிவ்வளவு அடியெனக்குனது அம் புயபாதமே யருள்வாய், தையல்நாயகியைத்தரித்திடு ம்பரகாசரசமா யமர்ந்திடும்பரனே, தங்கமேனியனே சம்புசங்கரனே தயாளனேயெப்புமேல் மதனெரித் தநேத்திரமு மிங்கெனையாளரிஷபவாகனனுமாய் வரு வாய் இஷ்டலிங்கேசா யென்கருத்தினிலிருக்கும் ஈச னே மாசிலாமணியே. 10

அண்டர்கள் அமரர்கள் துதித்திடும்லிங்கம் அரிய யன்போற்றிடும்லிங்கமே, அகத்தியர் பூசைபுரிந்திடும் லிங்கம் அடியவர்க்கெளிதானலிங்கம், திண்டிசையோ ர்கள் புகழ்ந்திடும்லிங்கப் சித்தவித்தியாதரர் தொழு திடுலிங்கம் தசரதமகனர் பூசைபுரிந்திடும்லிங்கம் சிவ சிவாராமலிங்கம், உண்டனையவர்க்கு மொருதுணைலி ங்கம் மூர்த்தியாய்போற்றிடும் லிங்கம் முத்தமகாசி விஸ்வநாதலிங்கம் உம்பர்க் குகந்ததேராமலிங்கம், எ ண்டிசையதி யிசைந்தபார்வதியும்ரிடப வாகனனுமா ய் வருவாய் இஷ்டலிங்கேசா யென்கருத்தினி லிருக் கும் ஈசனே மாசிலாமணியே. 11

இஷ்டலிங்கப்பதிகம்-முற்றிற்று.